# கௌரவ ஸ்கொட் மொறிசன் பா.உ

குடிவரவு மற்றும் எல்லைப்புறப் பாதுகாப்பு அமைச்சர்

**ஊடக அறிக்கை**

**2014 நவம்பர் 29 சனிக்கிழமை**

## ஆட்கடத்தல் முயற்சியில் ஈடுபட்டவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்

இலங்கையிலிருந்து மேற்கொள்ளப்படும் ஆட்கடத்தல் நடவடிக்கைகளைத் தோற்கடிக்க, இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிய ஒத்துழைப்பை அவுஸ்திரேலிய அரசாங்கம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

2014 நவம்பர் 26 ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாக 38 இலங்கைப் பிரஜைகளைக் கடத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து புறப்படும் ஒவ்வொரு படகும், ஆட்கடத்தல்காரரையும், அவர்களது வாடிக்கையாளர்களையும் அவுஸ்திரேலியா செல்வதற்கு சட்டவிரோதமான வழி உண்டு என்ற வகையில் சிந்திக்க ஊக்கமளிக்கின்ற போதிலும், அத்தகைய சட்டவிரோதமான மார்க்கம் இல்லை என்பதே உண்மையாகும்.

குடிவரவு மற்றும் எல்லைப்புறப் பாதுகாப்பு அமைச்சர் கௌரவ ஸ்கொட் மொறிசன் கருத்து வெளியிடுகையில், ‘அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் சட்டவிரோதமாகச் செல்ல முற்படும் மக்கள் இரண்டு நிலைப்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்’ என்று கூறினார்.

‘ஒன்று அவர்களது படகு இடைமறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும். இரண்டாவது, பப்புவா நியூகினி அல்லது நவுறு போன்ற நாடுகளுக்கு அனுப்பப்பட்டதை அடுத்து, அந்த நாடுகளில் அவர்களை மீள் குடியேற்றவென விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். அவுஸ்திரேலியாவில் மீள் குடியேற்றம் என்பது இயலாத விடயம்’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

சகலருக்கும் இந்தச் சட்டம் பொருந்தி வரும். விதிவிலக்கு என்பதற்கே இடமில்லை.

இது அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் கொள்கையாகும். ஒருபோதும் இது மாற்றப்பட மாட்டாது.

ஆட்கடத்தல் முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கும், அதன் எல்லைகளைப் பாதுகாப்பதற்குமென அவுஸ்திரேலிய அரசாங்கம் அதன் பிராந்திய பங்காளித்துவ நாடுகளுடன் இணைந்து தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வரும்.

ஆட்கடத்தல்காரர்களின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி, சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு வருவதில் மக்கள் ஈடுபடக் கூடாது. அவுஸ்திரேலியாவுக்கான பாதை தொடர்ந்தும் மூடப்பட்டுள்ளது.